| | |
|---|---|
| அனுப்புநர் | பெறுநர் |
| முனைவர்.சி.உஷாராணி,<br>எம்.எஸ்ஸி., பி.எட்., பிஎச்.டி.,<br>அரசுத் தேர்வுகள் இயக்குநர்,<br>சென்னை – 600 006. | அனைத்து மேல்நிலைப் பள்ளித் தலைமையாசிரியர்கள்<br>(முதன்மைக் கல்வி அலுவலர்கள் வழியாக) |

ந.க.எண். 009823/எப்1/2019 நாள் : 31.07.2020

ஐயா/அம்மையீர்,

பொருள் : சென்னை–6, அரசுத் தேர்வுகள் இயக்ககம் – மேல்நிலை முதலாம் ஆண்டு பொதுத் தேர்வு மார்ச் 2020 மற்றும் மேல்நிலை இரண்டாமாண்டு மறுதேர்வு – விடைத்தாளின் நகல் மற்றும் மறுகூட்டலுக்கு விண்ணப்பித்தல் – பள்ளி மாணவர்கள் தாம் பயின்ற பள்ளிகள் மூலமாகவும் தனித்தேர்வர்கள் தேர்வெழுதிய மையங்கள் மூலமாகவும் விண்ணப்பித்தல் – பள்ளித் தலைமை ஆசிரியர்களுக்கு அறிவுரை வழங்குதல் –தொடர்பாக.

பார்வை:
1. அரசாணை (நிலை ) எண்.379, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறை, நாள்.22.07.2020.
2. அரசுத் தலைமைச் செயலாளரின் கடிதம், அரசுக் கடித (நிலை) எண்.395 / பே.மே.2/2020, நாள்.30.07.2020.

-----

மார்ச் 2020, மேல்நிலை முதலாம் ஆண்டு பொதுத்தேர்வெழுதிய தேர்வர்கள் மற்றும் 27.07.2020 அன்று நடைபெற்ற மேல்நிலை இரண்டாமாண்டு மறுதேர்வெழுதிய தேர்வர்களின் தேர்வு முடிவுகள் இன்று **(31.07.2020)** காலை 9.30 மணிக்கு வெளியிடப்பட்டுள்ளது.

மேல்நிலைப் பள்ளித் தலைமையாசிரியர்களுக்கு மேல்நிலை முதலாமாண்டு பொதுத்தேர்வு மற்றும் மேல்நிலை இரண்டாமாண்டு மறுதேர்வு தொடர்பான மறுகூட்டல் மற்றும் விடைத்தாள் நகல் கோரும் விண்ணப்பங்களை இணையதளத்தில் பதிவேற்றம் செய்தல் தொடர்பாக பின்வரும் அறிவுரைகளை வழங்கப்படுகிறது.

1. மார்ச் 2020 மேல்நிலை முதலாமாண்டு பொதுத் தேர்வு மற்றும் மேல்நிலை இரண்டாமாண்டு மறுதேர்விற்கான விடைத்தாள் நகல் கோரி அல்லது மதிப்பெண் மறுகூட்டல் கோரி விண்ணப்பிக்க **பள்ளி மாணவர்கள் தாங்கள் பயின்ற பள்ளிகள் வாயிலாகவும், தனித்தேர்வர்கள் தாங்கள் தேர்வெழுதிய தேர்வு மையத்தின் வாயிலாகவும்,** பின்வரும் அட்டவணையில் குறிப்பிட்டுள்ள நாள்களில் விண்ணப்பிப்பதற்கு கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளது.

| தேர்வர்கள் வகை | விடைத்தாள் நகல் / மதிப்பெண் மறுகூட்டலுக்கு விண்ணப்பிக்க வேண்டிய நாள்கள் |
|---|---|
| மேல்நிலை முதலாமாண்டு பொதுத்தேர்வெழுதிய தேர்வர்கள் | **05.08.2020 (புதன் கிழமை) முதல் 12.08.2020 (புதன் கிழமை) வரை** |
| மேல்நிலை இரண்டாமாண்டு மறுதேர்வெழுதிய தேர்வர்கள் | **07.08.2020 (வெள்ளிக் கிழமை) வரை** |

2. மேல்நிலைப் பள்ளித் தலைமையாசிரியர்கள் / +1 மற்றும் +2 மறுதேர்வு தனித்தேர்வர்களுக்கான தேர்வுமைய பள்ளித் தலைமையாசிரியர்கள் பார்வை 1–ல் காணும் அரசாணையில் வழங்கப்பட்டுள்ள நிலையான செயல்பாட்டு வழிமுறைகளைப் பின்பற்றி, **மேற்குறிப்பிட்டுள்ள அட்டவணையில் குறிப்பிட்டுள்ள நாள்களில்** தங்களுடைய பள்ளி மாணவர்களது/தங்கள் தேர்வு மையத்தில் தேர்வெழுதிய தனித் தேர்வர்களது விடைத்தாள் நகல் / மறுகூட்டல் கோரும், விண்ணப்பங்களை, தங்களுக்கு வழங்கப்பட்டுள்ள User ID, Password –ஐ பயன்படுத்தி இணையதளம் வாயிலாக விண்ணப்பங்களை பதிவேற்றம் செய்ய வேண்டும்.

3. எனவே, பள்ளி மாணவர்கள்/தனித்தேர்வர்கள் விண்ணப்பங்களைப் பதிவு செய்ய தங்களது பள்ளிக்கு வரும்பொழுது, தாங்கள் அதற்கேற்ப தகுந்த ஏற்பாடுகளைத் தயாராக செய்து வைத்திருத்தல் வேண்டும்.

4. ஒவ்வொரு பள்ளிக்கும் ஏற்கனவே வழங்கப்பட்டுள்ள User ID, Password–ஐ பயன்படுத்தியும், கீழ்க்குறிப்பிட்டுள்ள அறிவுரைகளைப் பின்பற்றியும் மேற்குறிப்பிட்டுள்ள நாள்களில் விண்ணப்பங்களை ஆன்–லைனில் பதிவேற்றம் செய்திட அனைத்துப் பள்ளித் தலைமை ஆசிரியர்களும் உரிய நடவடிக்கையினை மேற்கொள்ள வேண்டும்.

| | |
|---|---|
| i) | www.dge.tn.gov.in என்ற இணையதளத்திற்குச் சென்று "click to access to online portal" என்ற வாசகத்தினை click செய்து திரையில் தோன்றும் "HSE Examination March 2020 – Scan / RT-1 application for Registration" என்ற தலைப்பினை click செய்து USER-ID மற்றும் Password-ஐ பயன்படுத்தி, பின்னர், HSE FIRST YEAR 2020 SCAN COPY / RT1 APPLICATION **(OR)** HSE SECOND YEAR RE-EXAM 2020 SCAN COPY / RT1 APPLICATION என்பதை click செய்து, திரையில் தோன்றும் விண்ணப்பப் படிவத்தினை பதிவிறக்கம் செய்து தேவைப்படும் நகல்களை எடுத்துக் கொள்ளவேண்டும் மேலும், தேர்வர்களுக்கான அறிவுரைகளையும் பதிவிறக்கம் செய்து தேர்வர்களுக்கு வழங்கவேண்டும். |

| | |
|---|---|
| ii) | மாணவர்கள் விடைத்தாள் நகல் கோரியோ அல்லது மதிப்பெண் மறுகூட்டல் கோரியோ வரும்பொழுது, அன்னாரிடம் ஒரு படிவத்தை அளிக்க வேண்டும். எந்தெந்தப் பாடங்களுக்கு விடைத்தாளின் நகல் தேவை ? எந்தெந்த பாடங்களுக்கு மறுகூட்டல் மட்டும் தேவை ? போன்ற விவரங்களை மாணவர்கள் பூர்த்தி செய்ய அறிவுறுத்தி அப்படிவத்தைப் பெற்றுக் கொள்ள வேண்டும்.<br>விடைத்தாள் நகல் மற்றும் மறுகூட்டலுக்குரிய தொகையினைப் பணமாகப் பெற்றுக் கொள்ள வேண்டும்.<br><br>**<u>விடைத்தாளின் நகல் (Copy of the answer sheet)- கட்டணம்</u>**<br>பாடம் ஒவ்வொன்றிற்கும் – ரூ. 275/–<br><br>**<u>மறுகூட்டல் (Re- totaling) கட்டணம்:</u>**<br>உயிரியல் பாடம் மட்டும் – ரூ.305/–<br>ஏனையப் பாடங்கள் (ஒவ்வொன்றிற்கும்) – ரூ.205/– |
| iii) | ஒரே சமயத்தில் ஒரே பாடத்திற்கு விடைத்தாள் நகல் மற்றும் மறுகூட்டல் கோரி விண்ணப்பிக்கக் கூடாது. |
| iv) | விடைத்தாள் நகல் பெற்ற பின்னரே மதிப்பெண் மறுகூட்டலுக்கு (RT- II)/மறுமதிப்பீட்டிற்கு விண்ணப்பிக்க வாய்ப்பு வழங்கப்படும். |
| v) | விடைத்தாள் நகல் தேவையில்லையெனில், மாணவர் விரும்பினால் மறுகூட்டலுக்கு (RT-I) தற்போது விண்ணப்பிக்கலாம். இவ்விவரங்களை மாணவர்களுக்கு மிகத் தெளிவாக எடுத்துரைக்கவேண்டும். |
| vi) | விடைத்தாள் நகல் மற்றும் மறுகூட்டல் கோரி பள்ளிகள் / தேர்வு மையங்களில் விண்ணப்பிக்கும் மாணாக்கர் அதன்பிறகு விடைத்தாள் நகல் பதிவிறக்கம் செய்வது, மறுமதிப்பீட்டிற்கு விண்ணப்பிப்பது தொடர்பான விவரங்களை அரசுத் தேர்வுத்துறையால் வெளியிடப்படும் செய்திக்குறிப்பின் மூலமே அறிந்து செயல்பட வேண்டும். எக்காரணம் கொண்டும் பள்ளிகள் / தேர்வுமையங்களை அணுக வேண்டாம் என்பதை விண்ணப்பிக்கும் மாணாக்கர் / பெற்றோர்களுக்கு அறிவுறுத்த வேண்டும். |
| vii) | மாணவர்களிடமிருந்து பூர்த்தி செய்த படிவத்தையும், கட்டணத் தொகையினையும் பெற்றவுடன், இணையதளத்தில் அவ்விவரங்களை பதிவேற்றம் செய்யவேண்டும். |

| | |
|---|---|
| Viii) | எந்தெந்த பாடங்களுக்கு மாணவர்கள் விடைத்தாள் நகல் கோரி விண்ணப்பிக்கிறார்கள் மற்றும் எந்தெந்த பாடங்களுக்கு மதிப்பெண் மறுகூட்டல் கோரி விண்ணப்பிக்கிறார்கள் என்ற விவரங்களை இணையதளத்தில் பதிவு செய்தவுடன் மாணவர் அளித்த விண்ணப்பப் படிவத்தோடு அவ்விவரங்களை மீண்டும் சரிபார்த்து உறுதி செய்து கொள்ள வேண்டும். மாணவர்களிடம் எந்தெந்த பாடங்களுக்கு விடைத்தாள் நகல் கோரியும், மதிப்பெண் மறுகூட்டல் கோரியும் விண்ணப்பித்துள்ளார்கள் என்பதனை மீண்டும் உறுதிசெய்து அதன்பின்னரே Submit கொடுக்க வேண்டும். Submit செய்தவுடன் விண்ணப்ப எண், பதிவெண், விண்ணப்பித்த பாடங்கள்,செலுத்த வேண்டிய தொகை ஆகியவை குறிப்பிட்ட ஒப்புகைச்சீட்டு (acknowledgement) Print ஆகிவரும். அந்த ஒப்புகைச் சீட்டில் கையொப்பம் மற்றும் பள்ளியின் முத்திரையிட்டு மாணவரிடம் அளிக்கவேண்டும். ஒப்புகைச்சீட்டினை மாணவர் மிக பாதுகாப்பாக வைத்துக் கொள்ள அறிவுறுத்த வேண்டும்.<br><br>தேர்வர்கள் தமக்கு வேண்டாத பாடத்திற்கு விண்ணப்பம் தவறுதலாக பதிவு செய்யப்பட்டு விட்டதாகவும், அதன்பின் பதியப்படாத வேறு பாடத்திற்கு விடைத்தாள் நகல் வழங்குமாறும் இவ்வியக்கத்தில் வந்து கோரும் நிகழ்வுகள் தங்களது கவனமான செயல்பாடுகள் மூலம் தவிர்க்கப்பட வேண்டும். அவ்வாறான நிகழ்வுகள் நிகழும் பட்சத்தில் சம்பந்தப்பட்ட தலைமையாசிரியர்கள் மீது துறை வாரியான நடவடிக்கை மேற்கொள்ளப்படும். |
| ix) | ஒவ்வொரு நாளும் பணி முடிந்தவுடன், daily summary report/daily detailed report இவ்விரண்டையும் click செய்தால் அன்றைய தினம் பதிவு செய்த விவரங்கள் தங்களுக்குக் கிடைக்கும். இந்த அறிக்கையினை பதிவிறக்கம் செய்துகொண்டு, அன்றைய தினம் பதிவுசெய்த விண்ணப்பங்களையும் மாணவர்களிடமிருந்து பெறப்பட்டத் தொகையினையும் ஒப்பிட்டு சரிபார்த்துக் கொள்ள வேண்டும். |
| x) | +2 மறுதேர்வு மற்றும் +1 தேர்வுகளுக்கு விடைத்தாள் நகல் / மறுகூட்டலுக்கு விண்ணப்பிப்பதற்கு இறுதி நாளான முறையே **07.08.2020 / 12.08.2020** அன்று மாலை **04.00** மணிக்கு விண்ணப்பிக்கும் நேரம் முடிவடைந்தவுடன், FINAL SUMMARY REPORT/FINAL DETAILED REPORT என்ற பகுதியினை click செய்தால் தங்கள் பள்ளியில் விடைத்தாள் நகல் மற்றும் மறுகூட்டலுக்கு விண்ணப்பித்த மாணவர் விவரங்கள், விண்ணப்பித்த பாடங்கள், பெறப்பட்ட மொத்தத் தொகை ஆகிய விவரங்கள் தெரிய வரும். மாணவர்களிடமிருந்து பெறப்பட்ட கட்டணத் தொகையினை **(+2 மறுதேர்வு / +1 தேர்வுக்கான <u>விடைத்தாள் நகல் விண்ணப்ப கட்டணத் தொகையை தனியாகவும், மறுகூட்டல்–I விண்ணப்ப கட்டணத் தொகையை தனியாகவும்)</u>** முறையே **08.08.2020 / 13.08.2020** அன்று இணையதளத்தின் வாயிலாக செலுத்தவேண்டும்.<br><br>+2 மறுதேர்வு மற்றும் +1 தேர்வுகளுக்கான Summary Report–ன் இரு நகல்களையும், கட்டணத்தினை இணையதளம் வாயிலாக செலுத்தியதற்கான செலுத்துச் சீட்டுகளையும் **14.08.2020–**க்குள் சம்பந்தப்பட்ட மாவட்ட அரசுத் தேர்வுகள் உதவி இயக்குநரிடம் ஒப்படைக்கவேண்டும். |

மேற்கூறிய அறிவுரைகளைப் பின்பற்றி மேல்நிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர்கள், விடைத்தாள் நகல் / மறுகூட்டல் கோரும் தங்கள் பள்ளி / தேர்வு மைய மாணவர்களின் / தனித்தேர்வர்களின் விண்ணப்பங்களை இணையதளத்தில் பதிவேற்றம் செய்யுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

ஒம்/–

**அரசுத் தேர்வுகள் இயக்குநர்**

<u>நகல்</u> :

1. அனைத்து முதன்மைக் கல்வி இயக்குநர்கள்
2. இணைஇயக்குநர் (கல்வி), புதுச்சேரி.
3. அனைத்து மாவட்ட அரசுத் தேர்வுகள் உதவி இயக்குநர்கள்,
4. அனைத்து மாவட்டக் கல்வி அலுவலர்கள்
5. எச்1, எப்3 & எச்3 பிரிவுகள் (அலுவலகம்).